# கோயில்களின் நந்தவனங்களை பராமரிக்க நடவடிக்கை என்ன

## உயர்நீதிமன்றம் கேள்வி



**மதுரை, அக்.1–**

தென்மாவட்ட கோயில்களுக்கு சொந்தமான நந்தவனங்களை பராமரிக்க மேற்கொண்ட நடவடிக்கை குறித்து அறநிலையத்துறை அறிக்கை தாக்கல் செய்ய உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டது.

இந்திய மருத்துவ அறக்கட்டளை மேலாண்மை அறங்காவலர் ஜெயவெங்கடேஷ் தாக்கல் செய்த பொதுநல மனு:

மதுரை, திண்டுக்கல், தேனி, தஞ்சாவூர் உள்ளிட்ட தென்மாவட்ட கோயில்களில் நந்தவனங்கள் இருந்தன. இவற்றின் பெரும்பகுதி வணிகவளாகம், அலுவலகம், வாகனங்கள் நிறுத்துமிடங்களாக மாற்றப்பட்டுள்ளன. குப்பைகள் குவிக்கப்படுகின்றன.

நந்தவனங்களை பாதுகாக்க மற்றும் அவற்றிலுள்ள பூக்களை பறித்து மாலையாக கோர்த்து கோயில்களுக்கு வழங்க பணியாளர்கள் இருந்தனர். அவர்கள் வேறு பணிக்கு பயன்படுத்தப்படுகின்றனர்.

உடல், மனநலம், அமைதிக்காக கடவுளை வழிபட வரும் பக்தர்களுக்கு நந்தவனங்கள் அமைதி, நறுமணத்தை தருகின்றன. மருத்துவ குணமுடைய மரங்களிலிருந்து கிடைக்கும் மூலிகைக்காற்று நோய்களை குணப்படுத்தும் தன்மை கொண்டது. நந்தவனங்களை பாதுகாக்கக்கோரி தமிழக அறநிலையத்துறை கமிஷனருக்கு மனு அனுப்பினேன். நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு குறிப்பிட்டார்.

நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், எல்.விக்டோரியா கவுரி அமர்வு: நந்தவனங்களை பராமரிக்க மேற்கொண்ட நடவடிக்கை குறித்து அறநிலையத்துறை முதன்மைச் செயலர், கமிஷனர் அக்.,21ல் அறிக்கை தாக்கல் செய்ய நோட்டீஸ் அனுப்பப்படுகிறது.

இவ்வாறு உத்தரவிட்டனர்.

தினமலர்
மதுரை | செவ்வாய் | 1.10.2024

# கோயில்களின் நந்தவனங்களை பராமரிக்க நடவடிக்கை என்ன

## உயர்நீதிமன்றம் கேள்வி



மதுரை, அக்.1–
தென்மாவட்ட கோயில்களுக்கு சொந்தமான நந்தவனங்களை பராமரிக்க மேற்கொண்ட நடவடிக்கை குறித்து அறநிலையத்துறை அறிக்கை தாக்கல் செய்ய உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டது.

இந்திய மருத்துவ அறக்கட்டளை மேலாண்மை அறங்காவலர் ஜெயவெங்கடேஷ் தாக்கல் செய்த பொதுநல மனு:

மதுரை, திண்டுக்கல், தேனி, தஞ்சாவூர் உள்ளிட்ட தென்மாவட்ட கோயில்களில் நந்தவனங்கள் இருந்தன. இவற்றின் பெரும்பகுதி வணிகவளாகம், அலுவலகம், வாகனங்கள் நிறுத்துமிடங்களாக மாற்றப்பட்டுள்ளன. குப்பைகள் குவிக்கப்படுகின்றன.

நந்தவனங்களை பாதுகாக்க மற்றும் அவற்றிலுள்ள பூக்களை பறித்து மாலையாக கோர்த்து கோயில்களுக்கு வழங்க பணியாளர்கள் இருந்தனர். அவர்கள் வேறு பணிக்கு பயன்படுத்தப்படுகின்றனர்.

உடல், மனநலம், அமைதிக்காக கடவுளை வழிபட வரும் பக்தர்களுக்கு நந்தவனங்கள் அமைதி, நறுமணத்தை தருகின்றன. மருத்துவ குணமுடைய மரங்களிலிருந்து கிடைக்கும் மூலிகைக்காற்று நோய்களை குணப்படுத்தும் தன்மை கொண்டது. நந்தவனங்களை பாதுகாக்கக்கோரி தமிழக அறநிலையத்துறை கமிஷனருக்கு மனு அனுப்பினேன். நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு குறிப்பிட்டார்.

நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், எல்.விக்டோரியா கவுரி அமர்வு: நந்தவனங்களை பராமரிக்க மேற்கொண்ட நடவடிக்கை குறித்து அறநிலையத்துறை முதன்மைச் செயலர், கமிஷனர் அக்.,21ல் அறிக்கை தாக்கல் செய்ய நோட்டீஸ் அனுப்பப்படுகிறது.

இவ்வாறு உத்தரவிட்டனர்.

# நந்தவனங்களை பாதுகாக்க கோரி வழக்கு

## நிலை அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவு

மதுரை, அக். 2: மதுரையை சேர்ந்த ஜெய வெங்கடேஷ். ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த பொது நல மனு:

தமிழ்நாட்டில் உள்ள பல கோயில்களில் நந்தவனம் அமைக்கப்பட்டு அதில் செடிகள், பூந்தோட்டம் வைக்கப்பட்டிருக்கும், அங்கு பக்தர்கள் ஓய்வு எடுப்பார்கள்.

ஒரு சில பிரசித்தி பெற்ற கோயில்களில் மட்டுமே நந்தவனம் முறையாக பராமரிக்கப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டிற்கு உள்ளது. பூந்தோட்டங்களில் இருந்து பறிக்கப்படும் பூக்களை வைத்து கோயிலில் உள்ள சுவாமிகளை தரிசிப்பர்.

எனவே, கோயில்களில் உள்ள மரங்கள், குளங்கள் மற்றும் நந்தவனத்தை பாதுகாக்க ஊழியர்களை நியமித்து, முறையாக பராமரித்து பக்தர்களுக்கு உபயோகிக்கும் வகையில் வழிவகை செய்ய வேண்டும். இதனால் கோயில்களில் அதிக பக்தர்கள் வந்து செல்வார்கள். மேலும் கோயில்களில் உள்ள அரிய வகை மரங்கள் பாதுகாக்கப்படும். எனவே, நந்தவனங்களில் பூச்செடிகள் மற்றும் மரங்களை பாதுகாத்து பராமரிக்க பாதுகாவலரை நியமிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் சுப்பிரமணியன் மற்றும் விக்டோரியா கவுரி அமர்வு முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது, கோயில்களில் உள்ள நந்தவனங்களை பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து நிலை அறிக்கை தாக்கல் செய்ய, அறநிலையத்துறைக்கு உத்தரவிட்டு வழக்கு விசாரணையை அக். 21ம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
1.10.2024 (செவ்வாய்க்கிழமை)

# கோவில் நந்தவனங்கள் பராமரிக்கப்படுகிறதா?

## அதிகாரிகள் அறிக்கை அளிக்க மதுரை ஐகோர்ட்டு உத்தரவு

மதுரை, அக்.1–

கோவில்களின் நந்தவனங்கள் முறையாக பராமரிக்கப்படுகிறதா? என்பது பற்றி அறநிலையத்துறை அறிக்கை தாக்கல் செய்ய மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

### கோவில் நந்தவனம்

மதுரையைச் சேர்ந்த சித்த மருத்துவர் ஜெய வெங்கடேஷ், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:–

தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான கோவில்களில் நந்தவனம் அமைக்கப்பட்டு உள்ளன. ஒரு சில கோவில்களில் மட்டுமே நந்தவனம் முறையாக பராமரித்து பக்தர்களின் பயன்பாட்டில் உள்ளன. அங்குள்ள பூந்தோட்டங்களில் இருந்து பறிக்கப்படும் பூக்கள் பூஜைக்கு பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான கோவில்களின் நந்தவனம் பராமரிப்பின்றி கிடக்கிறது.

அதேபோல பல்வேறு கோவில்களில் நந்தவனத்துக்கு உரிய இடம் ஒதுக்கப்படவில்லை. இதனால் கோவிலுக்கு தேவையான பூக்களை வியாபாரிகளிடம் இருந்து கோவில் நிர்வாகம் வாங்கும் நிலை உள்ளது. இதுபோன்றவற்றை தவிர்க்க கோவில்களில் உள்ள மரங்கள், குளங்கள் மற்றும் நந்தவனத்தை பாதுகாக்க ஊழியர்களை நியமித்து முறையாக பராமரித்து, பக்தர்கள் உபயோகிக்கும் வகையில் செய்ய வேண்டும். எனவே மதுரை ஐகோர்ட்டுக்கு உள்பட்ட மாவட்டங்களில் பிரசித்தி பெற்ற கோவில்களில் உள்ள நந்தவனங்களை பராமரித்து, பாதுகாக்க பாதுகாவலர்களை நியமிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் சுப்பிரமணியன், விக்டோரியா கவுரி ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

### அதிகாரிகளுக்கு உத்தரவு

அப்போது நீதிபதிகள், கோவில்களில் உள்ள நந்தவனங்களை பாதுகாக்க எடுத்த நடவடிக்கை குறித்து அறநிலையத்துறை அதிகாரிகள் அறிக்கை தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டு, விசாரணையை வருகிற 21–ந்தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# கோயில் நந்தவனங்களை பராமரிக்க கோரி வழக்கு

## அறநிலையத்துறை ஆணையர் பதிலளிக்க உத்தரவு

● மதுரை

தமிழகத்தில் கோயில் நந்தவனங்களை பராமரிக்கக் கோரிய வழக்கில் அறநிலையத்துறை ஆணையர் பதில் அளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை ஜெய்ஹிந்த்புரத்தைச் சேர்ந்த மருத்துவர் ஜெய வெங்கடேஷ், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

தமிழகத்தில் பல்வேறு கோயில்களில் நந்தவனம் அமைக்கப்பட்டு மூலிகைச் செடிகள், பூச்செடிகள், தல விருட்சங்கள் வளர்க்கப்படும்.

இந்த நந்தவனங்களில் பறிக்கப்படும் பூக்களை கொண்டு சுவாமி, அம்பாளுக்கு மாலை அணிவிப்பது, அலங்காரம், பூஜை செய்வது உள்ளிட்ட காரியங்கள் நடைபெறும். தற்போது ஒரு சில கோயில்களில் மட்டுமே நந்தவனங்கள் முறையாக பராமரிக்கப்படுகின்றன.

மற்ற கோயில்களில் நந்தவனங்களை முறையாக பராமரிக்காமல் மூலிகைச்செடிகள், தல விருட்சங்கள் வாடி வருகின்றன. எனவே தமிழகத்தில் பிரபலமான கோயில்களில் உள்ள நந்தவனங்களைச் சுற்றி கம்பி வேலி அமைத்து பாதுகாக்கவும், போதுமான ஊழியர்களை நியமித்து தண்ணீர் ஊற்றி முறையாக பராமரிக்கவும் உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதிகள் சுப்ரமணியன், எல்.விக்டோரியா கௌரி அமர்வு விசாரித்து, தமிழக கோயில்களில் உள்ள நந்தவனங்களை பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? என்பது குறித்து அறநிலையத்துறை ஆணையர் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை அக்.21-ம் தேதிக்கு தள்ளி வைத்தது.

# Plea seeks to restore nandavanams at TN temples

TIMES NEWS NETWORK

**Madurai:** Madras high court has sought a response from the govt on a plea which sought to restore nandavanams (gardens) at various temples across the state by fencing them and deploying sufficient employees for their maintenance.

A division bench of justice R Subramanian and justice L Victoria Gowri was hearing a public interest litigation filed by J Jeyavenkatesh.

The petitioner stated that nandavanams in many temples have disappeared, and are being used as slipper stands, for vehicle parking, and dumping of waste, due to poor maintenance. Lack of funds is a major reason for the disintegration of such nandavanams. Only a few in major temples such as Meenakshi Sundareswarar Temple in Madurai, are being maintained properly.

During ancient times, the temples were well maintained with beautiful nandavanams. Against the backdrop of the majestic gopurams, the neatly grown rows of pink roses and nerium plants in various colours in the temple gardens met the daily pooja requirement.

He stated that it is necessary for the authorities to protect the nandavanams by fencing them and providing adequate water facilities. The petitioner stated that he had submitted a representation in this regard; however, it is yet to be considered. Hence, he moved court.